உ அன்பளிப்பு

4729

கணபதி துணை.

உதயணன் சரித்திரச் சுருக்கம்.

உத்தமதானபுரம்
மஹாமஹோபாத்தியாய
வே. சாமிநாதையரால்
பெருங்கதையென்னுந் தமிழ்நூலிலிருந்து வசனமாக
இயற்றப்பெற்றது.

இஃது
அரும்பதவுரை, அபிதானவிளக்கங்களுடன்

சென்னை
கமர்ஷியல் அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பெற்றது.

ருத்ரோத்காரிஹூ பங்குனிமீ

1924.

Copyright registered.]

[விலை ரூ: 1—4—0

MAHAMAHOPADHYAYA,
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY,
TIRUVANMIYUR. MADRAS-41.

உதயணன் சரித்திரச் சுருக்கம்.

முதலாவது உஞ்சைக் காண்டம்.

சம்புத்தீவிற் சுதர்சனமென்னுமலையின் தெற்கேயுள்ள
ாரதவருடத்திலுள்ள [1]தரும கண்டத்தில் [2]வத்தவநாட்டில் [3]
ம்பிநகரத்தில் குருகுலத்திற் பிறந்து அதனை விளக்கிய சதா
னன்னும் அரசன் சேதிநாட்டிலுள்ள [4]வைசாலி நகரத்தரசனு
யர்குலத்தவனுமாகிய [5]சேடகனென்பவனுடைய புதல்வி மிருக
தியென்பவளை மணஞ்செய்து இல்லறத்தை இனிது நடத்தி
ட்சி செய்துவந்தான். இவன், அரசர்க்குரிய குணவிசே
டையவனாதலின், மந்திரச்சுற்றத்தாரும் தந்திரச்சுற்ற
லேயோரும் மிக்க இன்பமுற்று இவன் குடைநிழலில் வ
யினர். இங்ஙனம் சில ஆண்டுகள் சென்றன.

சாற்காலத்தில் ஒருநாள் மேகந்தோன்றுவதையும் அழிவதை
கண்டபொழுது, வைராக்கியம்பிறந்தமையால், மேற்கூறிய சேடக
சன், ஞாலங்காவலை நஞ்செனவெறுத்துத் தன்புதல்வர் பதின்மர்
ள் மூத்தவனை தனமித்திரனை யழைத்து, "இனித்தவஞ்செய்ய
ல்வேன்; நீ இந்தஇராச்சியபாரத்தை ஒப்புக்கொள்ள வேண்டு
ன்றான்; அவன், "யானும் தவஞ்செய்தற்கு வருவேன்" என்
ிமறுப்ப, சேடகன், அவன் தம்பிகள் எண்மரைத் தனித்தனியே
ழைத்தழைத்துச் சொல்ல அவர்களும் மூத்தவன் கூறியதையே
ிமறுத்துவிட்டனர். அப்பால் அவன் பத்தாம்பிள்ளையாகிய [6]விக்
னை அருகழைத்து மிகவும் வற்புறுத்திக்கூறித் தன் அரசாட்
அவனிடம் ஒப்பித்துவிட்டுச் சென்று விபுலமென்னும் மலை
ன்றின் சாரலில் ஆலங்கானத்தில் தவஞ்செய்துகொண்டிருந்த
தரரென்னு முனிவரைச்சரணமடைந்து உபதேசம்பெற்றுப்
திமாவிரதம் பூண்டு தவஞ்செய்வானாயினன்.

---

1 ஆரியகண்டமெனவும் வழங்கப்படும். 2 வத்ஸதேசம்.
3 கோசம்பியென இந்நூலுள் வழக்கப்படும். 4 ஏஹயர்.
5 உதிதோதய காவியத்தில் இப்பெயர் காணப்படுகின்றது.
6 இவன்பெயர் பிரடஞ்சனனென்று அந்நூலிற் காணப்படுகின்றது.

உதயணன் சரித்திரச் சருக்கம்.

தந்தை முதலியவர்களுடைய பிரிவாற்றுமல் வருத்தமுற்ற வி
கிரன், நிகழ்ந்தவற்றைச் சதானிகனுக்கும் தன்தங்கை மிருகாவதி
கும் தூதர்மூலமாகத் தெரிவித்துவிட்டு தந்தையின் கட்டளையின்
படி அரசாட்சி செய்துகொண்டிருந்தான். விக்கிரனல் இச்செய்
தியை அறிந்த சதானிகன் வியந்தான்; மிருகாவதி மிக்க வருத்
ந்தையடைந்து மூர்ச்சையுற்றுள்; பின்பு கணவன் பலவாறு தேற்
தறி அவள் ஒருவாறு ஆறுதலுற்றிருந்தார்கள். இங்ஙனம்
ள் வாழ்ந்து வந்தார்கள். சிலகாலஞ் சென்றபின் மிருகாவதி
பமுற்றுள். அக்கருப்பத்தில் புண்ணிய புருடனுகிய தேவனொரு
ந்து தங்கினன். அவளுக்கு வேண்டிய பொருள்களை வரு
தளித்தும் விரும்பிய இடங்களுக்கு அழைத்துச் சென்றும்
ளது மயற்கை (மசக்கை)யைப்போக்கி அரசன் அவளைப் பாது
து வந்தான். கருப்பம் நிரம்பியது. அக்காலத்தில் ஒருநாளில்
மல் மாடத்துள்ள நிலாமுற்றத்தில் தானிருந்த இடங்களை
சாதிலிங்க முதலியவற்றுற் சிவந்த நிறமுள்ளனவாகச்
துச் சிவந்த மலர்மாலைகளையும் சிவந்த அணிகலங்களையும்
ணிந்துகொண்டு தன்னைச்சூழ்ந்துள்ள தோழியர்களையும் அங்
ம அணிந்துகொள்ளச் செய்வித்துவிட்டு அவர்களின் ஒரு
தசத்தின் மேல் சிவந்த பட்டாடை யொன்றைப் போர்த்திக்
காண்டு அவள் அயர்ந்து நித்திரைசெய்தாள். அப்பொழுது ஆகாய
யே சென்றதும் பல்வன்மையுடையதுமான [1]சரபப்பறவை
ன்று ஈரம்புலராத தசைத்தொகுதியென்று நினைத்து அவளை
த்துடன் தூக்கிக்கொண்டு பறந்து சென்று விபுலகிரியிற்
க முனிவருடைய பள்ளியினருகே மெல்ல வைத்து உண்ணத்
டங்குகையில், அவள் விழித்துக்கொண்டாள். அதனைக் கண்ட
பறவை, "இது தசைத்தொகுதி யன்று; உயிரோடுகூடிய ஒரு
ண்வடிவம்" என்று நினைத்து உண்ணமல் திடீரென்றெழுந்து
னனிடம் சென்றுவிட்டது. அப்பால் அவள் நாற்புறத்தையும் பார்த்
த் தான் வேறிடம் வந்திருத்தலை யறிந்து திகைத்து அஞ்சி வருந்து
ளாயினள். பின்பு அச்சத்தாலும் ஆகாய வழியே வந்த வருத்தத்
லும் கருப்ப வேதனை அதிகரிக்கப்பெற்றுச் சூரியோதய காலத்தில்
ல்லாக் கோள்களும் நல்வழி நோக்கத், திருமணி விளக்கம் திசை
ன்றழல ஓர் ஆண் குழந்தையைப் பெற்றுள்.

---

[1] கண்டப்புள்ளென்றும் கண்டபேரண்டமென்றும் கருடப்பறவையென்
ம் வேறு நூல்கள் கூறும்.

"பொருகடற் பருதிபோலப் பொன்னனுன் பிறந்த போழ்தே
மருளுடை மாத ருற்ற மம்மர்நோய் மறைந்தது" (சீவக. 304).

பின்பு அவள் மிக்க விருப்பத்தோடு அக்குழந்தையைத் தழுவி யெடுத்து அந்தச் சமயத்துள்ள தன் நிலைமையை நினைந்து பல வாறு புலம்பினள். அப்பொழுது நீராடுதற்பொருட்டு இயல்பாக அந்த வழியே அவ்விடம்வந்த சேடக முனிவருடைய காதிற்கு அவளுடைய புலம்பலொலி எட்டியது. உடனே அவர் வந்து கண்டு அவளைத் தம்முடைய மகளென்றறிந்ததன்றி நிகழ்ந்தவற்றையும் தம்முடைய ஞானத்தாலறிந்துகொண்டு, "நீ அஞ்சாதே" என்று அபயமளித்துக் குழந்தையுடன் அவளை அழைத்துச் சென்று தம் முடைய பள்ளியின் ஒருபால் இருக்கச் செய்து ஆதரித்து வருவாரா யினர். அவரைத் தன் தந்தையென்றறிந்த மிருகாபதி ஒருவகை யாக ஆறுதலுற்றிருந்தாள். அங்கே தவஞ்செய்துகொண்டிருந்த பரம விருடிகள் பல்லோர்க்குத் தலைவரும் தருமத்தையும் விரதத்தையும் தாங்கியவருமாகிய பிரமசுந்தர முனிவரும் அவர் மனைவி பழிப்பில் கற்பிற் பரமசுந்தரியும் சேடக முனிவருடைய விருப்பத்தின்படி மிருகாபதியைக் குழந்தையுடன் பாதுகாத்து வந்தமையின் அவள் சிறிதும் கவலையின்றியிருந்தனள்.

சூரியோதய காலத்திற் பிறந்தமையின் அவன் உதயணனென் னும் பெயர் பெறுதற்கு உரியனென்று சேடகமுனிவர் நாமகரணஞ் செய்ததன்றி அவனுடையவரலாறு அநேகருடைய வரலாறுகளுக்கு இடமாக விளங்குமென்றுங் கூறினர்;

"அதிரா ஞாலத் தரசுவீற் றிருந்த
கதையுரைக் கெல்லாங் காரண மாதலிற்
புதையிரு ளகற்றும் பொங்கொளி மண்டிலம்
உதய மிவர்வர வுதித்தோன் மற்றிவன்
உதயண னாகெனப் பெயர்முதற் கொளீஇ" (225-6:79-83).

உதயணன், பிறைபோல் வளர்ந்து மேற்கூறிய பிரமசுந்தர முனி வர்க்குப் பரமசுந்தரிபாற்றோன்றிய யூகியுடன் நட்புற்றுவிரும்பி விளையாடிப் பின் அம்முனிவரிடத்தும் சேடக முனிவரிடத்தும் அரசர்க்குரிய பலவகைக் கலைகளையும் வேறுகலைகளையும் அவனு டன் கசடறக்கற்று இயற்கையறிவாலும் செயற்கையறிவாலும் மேம் பட்டு விளங்கினன். அவர்களுடைய ஆக்கத்தைக்கண்டமுனிவர்கள் மிகவும் பாராட்டி ஆசிகூறினார்கள்.

அப்பால் ஒருநாள், பிரமசுந்தரமுனிவர் யானையின் கோபத்தை அடக்கி வயப்படுத்தி ஆளுதற்குரிய மந்திரமொன்றை உதயணனுக்கு உபதேசித்ததன்றி இசைப்பயிற்சி பண்ணுவித்து, முன்பு இந்திரனால் தமக்குக் கிடைத்திருந்ததும் யானைமுதலியவற்றை வயமாக்குவதற் குரியதுமாகிய கோடபதியென்னும் யாழை அவனுக்குக் கற்பித்து அதனை அவன் வாசித்துவருகையிற் கேட்டகாட்டியானைகள் முதலி யனவும் பறவைகளும் பிறவுயிர்களும் மிகுந்த உவகையுடன் வந்து அவனுக்கு வேண்டிய ஏவல்கள் செய்தலைக்கண்டு வியந்து அந்த யாழை அவனுக்கே கொடுத்து, "நீ இந்த வித்தையில் மிக்க ஆற்றலை அடைவாயாக" என்று ஆசி கூறினர். கூறியவர், "இவன் உனக்கு அடைக்கலம்" என்று தன்புதல்வனாகிய யூகியையும் அவன் பால் ஒப்பித்தனர்; "கடந்து ளோர்களுங் கடப்பரோ மக்கண்மேற் காதல்." பின்பு உதயணன் யூகியை உயிர்த்துணையாகக்கொண்டு எல்லாவகையிலும் சிறப்புற்று விளங்கினான்.

ஒருநாள், தான்சென்ற காட்டில் பலபிடிகள் சூழப்பெற்றதும் பதினாயிரம் யானைகளின்பலமுள்ளதுமான ஒருதெய்வயானை நின்றது. அதனைக்கண்ட உதயணன் மந்திரத்தியானத்தோடு கோடபதியை வாசித்தான். வாசிக்கவே அஃது அவனருகேவந்து மிக்க அன்பு பாராட்டி அவன் ஏவியதொழில்களைச் செய்தது; அதன் நிலையைக் கண்ட உதயணன் அதன்மேலேறித் தன்னிடமடைந்தான். அஃது அவனை விட்டுப்பிரியாமல் அவனுக்குரிய பணிகளைச் செய்துவந்தது. சில நாட்கள் சென்றபின்பு ஒருநாளிரவில் அந்தயானை அவன் கனவில் தோன்றி, "என்மேற் பாகரையேற்றினாலும் தோற்கயிற்றால் என்னைக்கட்டினாலும் யான் உண்ணுதற்கு முன்னமே நீ உண்டா லும் உன்னைவிட்டு நீங்கிவிடுவேன்" என்றது. கேட்ட உதயணன் உடனே விழித்தெழுந்து அதுமுதல் மேற்கூறிய மூன்று தவறு களும் உண்டாகாதபடி சாக்கிரதையாக நடந்துவந்தான். தெய்வ யானையும் அவனை விட்டுநீங்காமற் பணிபுரிந்து ஒழுகியது.

இப்படியிருக்குங்காலத்தில் அரசாட்சியில் வெறுப்புற்றுத் துற வறம் பூணுதற்கு விரும்பிய விக்கிரன் தனக்குச் சந்ததியில்லாமை யினால் தன் இராச்சியத்தைப் பாதுகாத்தற்கு யாருமில்லையேயென்று துன்பமுற்றுப் பின் தன் தந்தையாகிய சேடகமுனிவர்பாற் சென்று வணங்கி முதலில் தன் கருத்தைத்தெரிவித்து அப்பால் அவருடைய உபதேசமொழிகளை விருப்பத்துடன் கேட்டுக்கொண்டிருந்த பொ

ழுது, இயல்பாகவே அவ்விடம் வந்த உதயணனைக்கண்டு, ஒளியாலும் தோற்றப்பொலிவாலும் சிறப்புற்று விளங்கிய அவனை நன்குமதித்து, "இவன்யார்?" என்று கேட்டனன். கேட்கவே முனிவர், "குருகுலத் தரசனாகிய சதானிகன்தேவியும் உன்தங்கையுமாகிய மிருகாபதியின் புதல்வன் இவன்; ஊழ்வினைவயத்தால் அவள் இங்கேவந்து இவனைப்பெற்றனள். கல்விகேள்விகளில் இவன் சிறந்தவனாயினன். உரியபிராயம்வந்துவிட்டமையால் இவனுக்கு இனி அறிவிக்கவேண்டியவற்றை அறிவித்துக் கௌசாம்பிநகர்க்கு அனுப்ப எண்ணியிருக்கிறேன்" என்றனர். உடனே விக்கிரன் மிகவும் உவந்து, "இவனை அடியேனுக்கு அளித்தால் ஏயர் குலத்திற்கு உரிய உரிமையை இவன்பால் ஒப்பித்து இவனை அரசனாக்கிவிட்டுத் துறவு பூண்டு தவஞ்செய்து உய்வேன்" என்று முதலில் அவரையும் அப்பால் மிருகாபதியையும் இரந்து அவர்களுடைய அனுமதிபெற்று யூகியோடு உதயணனையும் மிருகாபதியையும் வைசாலிநகருக்கு அழைத்துச்சென்று அங்கேயுள்ள மந்திரிகளுக்கும் சேனைத்தலைவர்களுக்கும் மற்றவர்களுக்கும் தெரிவித்துத் தன் அரசாட்சியை அவன்பால் ஒப்பித்துவிட்டுத் தன் எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ளுதற்குத் தவவனஞ் சென்றான்.

மேற்கூறிய தெய்வயானை உதயணனுடனே வைசாலிக்கு வந்து வழக்கப்படியே உதயணனுக்குச் செய்தற்குரிய ஏவல்களைச்செய்துகொண்டு அவனுடைய யாழிசையை நுகர்ந்து அந்நகரில் இருந்தது.

அப்பால் உதயணன் யூகியைத் தன்னுடைய முதல்மந்திரியாக்கி அரசாட்சிசெய்துகொண்டு வைசாலி நகரத்திலிருந்தான். அப்போது அவன் தன்னுடைய வீரத்தாலும் யூகியின் உதவியாலும் தெய்வயானையின் உபகாரத்தாலும் பல பகைவர்களை வென்று அடக்கி அவர்களுடைய நாடுகளைத் தன்வயமாக்கி வாழ்ந்துவந்தான்.

நிலாமுற்றத்தில் உறங்கிய தேவியைக்காணாமற் சதானிகன் திடுக்கிட்டு நிகழ்ந்ததையறியாமல், பல இடங்களுக்கும் தன் பரிவாரங்களை அனுப்பித் தேடுவித்துக்கொண்டே காலங்கழித்துவந்தான். வருகையில் ஒருநாள் அவன் முக்கால உணர்ச்சியுள்ள ஸம்வ்ருதரென்னு முனிவரையடைந்து தன் குறையைத் தெரிவித்து வருந்தினன். அவர் மிருகாபதியைச் சரபப்புள் எடுத்துச்சென்று விபுலகிரியில் வைத்தது முதல் உதயணன் வைசாலியில் அரசாட்சி செய்துகொண்டிருப்பது இறுதியாகவுள்ள செய்திகளையெல்லாம் விளங்கக்

கூறியதன்றிச் சதானிகனுடைய பிற்காலச்செய்திகளையும் தெரிவித்தனர். உடனே சதானிகன் வைசாலி நகரத்தையடைந்து மிருகாபதியைக் கண்டு அவளுடைய குணவிசேடங்களைப் பாராட்டிப் புகழ்ந்தனன். பின்பு அவள்வாயிலாக உதயணனைக் கண்டு அவனால் உபசரிக்கப்பெற்றுச் சிலநாள் அங்கேயிருந்து, அப்பால் அவனை அந்நகரிலேயே அரசாட்சி செய்துகொண்டிருக்கும்படி சொல்லிவிட்டுத் தான்தேவியுடன் கௌசாம்பியையடைந்து முன்போலே அரசுபுரிந்துவந்தான். அப்போது மிருகாபதி இரண்டு புதல்வர்களைப் பெற்றாள். அவர்கள் முறையே பிங்கலன் கடகன் என வழங்கப் பெற்றனர். அவர்கள் கல்விகேள்விகளிற் சிறந்து விளங்கினார்கள். உதயணன் இடையிடையே கௌசாம்பிக்கு வந்து தந்தையுடன் சிலகாலமிருந்துவிட்டுச் செல்வதுண்டு. இங்ஙனம் சில ஆண்டுகள் சென்ற பின், சதானிகனுக்குத் தன் அரசாட்சியில் வெறுப்பும் துறவில் விருப்பமுமுண்டாயின; அதனால், உதயணனை வருவித்து அவன்பால் அரசாட்சியை ஒப்பித்துவிட்டுத் தான் எண்ணியவாறே தவஞ்செய்தற்கு வனஞ்சென்றான்.

அப்பால் உதயணன், கௌசாம்பி வைசாலியென்னும் இரண்டு இராச்சியங்களையும் கௌசாம்பியிலேயிருந்துகொண்டு செவ்வனே சிலநாள் ஆண்டு பின் வைசாலியிலேயிருந்து அரசுபுரியும்படி யூகியை நியமித்துவிட்டுத் தான் கௌசாம்பியைமட்டும் ஆளுவானாயினன்; யூகியையல்லாமற் கல்வியறிவிற் சிறந்தவர்களும் புறத்தே சென்று உலாவிவரும் உயிர்போன்றவர்களுமான வயந்தகன், உருமண்ணுவா, இடவகனென்று வேறு மூன்று மந்திரிகள் உதயணனுக்கு உண்டு. அவர்களும் வேறு சில தோழரும் அவனுக்கு அங்கே உதவிபுரிந்து வந்தார்கள். மேற்கூறிய தெய்வயானையும் அவனுக்கு வேண்டிய பணிகள்புரிந்து அங்கே உதவிசெய்து வந்தது. அப்போது உதயணன் பல பகைவர்களை வென்று அவர்களுடைய இடங்களைக் கைக்கொண்டு மிக மேம்பாடுற்றுவிளங்கினான். கல்வியாலும் வீரத்தாலும் ஆட்சி முறையாலும் பிரதாபத்தாலும் உதயணன் சிறந்தவனென்றபுகழ் எங்கும் பரவியது.

இங்ஙனமிருக்கையில் ஒருநாள் உதயணன், சேனையையும் தெய்வயானையையும் ஊரில் நிறுத்திவிட்டு உருமண்ணுவா முதலிய சில தோழரோடும் சில வீரரோடு மட்டுஞ் சென்று ஒரு காட்டில் வேட்டையாடிக் களைத்து மயங்கி நீர் வேட்கையுற்று வருந்தினன் ; மற்ற

வர்களும் அப்படியே வருத்தமடைந்தார்கள்; பின் எல்லோரும் "இந்தக் காட்டில் ஏதேனும் தெய்வமிருக்குமாயின் இரங்கி நம்முடைய தாகத்தை அது போக்கியருளும்" என்று நிச்சயித்துக் கொண்டவர்களாகி அங்கே ஒரு புரசமரத்தினிழலிலே சோர்ந்து கிடந்தார்கள்; கிடக்கையில், வெண்டுகில் உடுத்தியவனும் மிக மெல்லிய மேற்போர்வையையுடையவனும் அரையிற் கச்சணிந்தவனும் சந்தனம் பூசிய மார்பை யுடையவனும் ஒளிவிட்டு வீசுகின்ற மேனியையுடையவனும் பிறைவடம் விளங்குகின்ற கழுத்தை யுடையவனும் செங்கழுநீர் மாலையைச் சூடிய குஞ்சியையுடையவனும் ஆயிரம் இதழையுடைய செந்தாமரை மலர்போன்ற கண்களையுடையவனுமாகிய மிக அழகிய ஓரிளைஞன் அங்கே வந்து அவர்களை நோக்கி, "நீர் யாவிர்? மிகுந்த இளைப்பையடைந்திருக்கிறீர்களே; நேர்ந்த துன்பம் யாது?" என்று வினவினன்; அவர்கள் தமக்கு அப்போதுள்ள நீர்வேட்கைத் துன்பத்தைக் கூறினர். அவன் உடனே இனிய நன்னீரைக் கொணர்ந்து அளித்து அவர்களுடைய தாகத்தை நீக்கினன். நீக்கியபின் வேறொன்றையும் எதிர்பாராமல் அவன் செல்லத் தொடங்கிய பொழுது, அவர்கள் அவனுடைய உபகாரத்தை மிகவும் பாராட்டி அவனை நோக்கி, "இதுபோன்ற துன்பம் இனி எங்களுக்கு ஏதேனும் உண்டாகுமாயின், உம்மை நினைத்துப் போக்கிக்கொள்ளக் கருதுகின்றோம்; நீர் இன்னாரென்று எமக்குத் தெரிவிக்க வேண்டும்" என்று கேட்டனர். கேட்கவே அவன், "நான் குபேரனுக்குத் தொண்டு செய்யும் இயக்கர்களிலொருவன்; என் பெயர் நஞ்சுகனென்பது; உங்களுடைய இனிய நட்பினனாக என்னைக் கருதுக; நீங்கள் எந்தச் சமயத்தில் நினைத்தாலும் உடனே நான் வந்து நும் குறையைத் தீர்த்தற்குரிய கடப்பாடுடையேன்; என்னை நினைத்தற்குரிய மந்திரம் இஃது" என்று சொல்லி அம்மந்திரத்தை உருமண்ணுவாவுக்கு உபதேசித்துவிட்டுத் தன்னிடஞ் சென்றனன்; அவர்கள் அவனுடைய பேருதவியை மறவாதவர்களாகி அவனைப் பாராட்டிக் கொண்டு நகரம் வந்து சேர்ந்தார்கள்.

பின்பு ஒருநாள் நாடகவரங்கில்ஆடிய ஆடன்மகளிருடைய கூத்திலும் இசையிலும் மனத்தைச்செலுத்தி மயங்கிப்போய்ப் பசியின் மிகுதியால் உதயணன் மேற்கூறிய தெய்வயானைக்கு வழக்கம் போலே உணவளித்தலை மறந்து தான் முந்தியுண்டான். அதனையறிந்த அந்த யானை, "உதயணன் எனக்கு வாக்களித்ததை மறந்துவிட்டு உண்டது தன் புண்ணியக் குறைவாலேதான்" என்றெண்ணி